2009 பிப்ரவரி 24]

(ஆ) வேலூர் மாவட்டம், தகரகுப்பத்தில் பொது விநியோகத் திட்ட அரிசி கடத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகா, தகரகுப்பம் என்ற இடத்தில் 8-2-2009 அன்று ரேஷன் அரிசி லாரியில் கடத்தப்பட்டது குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. தி. வேல்முருகன் அவர்களும், விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திரு. சி. ஞானசேகரன், சுருக்கமாகப் பேச வேண்டும்.

முற்பகல் 11-10

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தாலுகாவில், தகரகுப்பம் என்கிற இடத்தில் 5 டன் ரேஷன் அரிசியை லாரியிலே கடத்திய சம்பவம் குறித்து நான் இங்கே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். வாணியம்பாடி, தகரகுப்பம் சம்பவம் என்பது 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோல குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த ரேஷன் அரிசி தமிழகம் எங்கும் பல இடங்களில், குறிப்பாக ஆந்திரா, கர்நாடகா எல்லையோரம் இருக்கக்கூடிய எங்களுடைய வேலூர் மாவட்டம், அதேபோல, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலிருந்தும் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்தும் அன்றாடம் நிறைய ரேஷன் அரிசி மற்ற மாநிலங்களுக்கு கடத்தப்படக்கூடிய நிகழ்வுகள் அதிகரித்து வருவதை நான் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ரேஷன் அரிசி கடத்தியவர்களைப் பிடிக்கிறார்கள், அவர்கள்மீது வழக்குப் போடுகிறார்கள். Essential Commodities Act Section 6A பிரகாரம், டி.ஆர்.ஓ. முன்னிலையில் விசாரணைக்குட்படுத்துகிறார்கள். முடிந்தால் பொருளைப் பறிமுதல் செய்கிறார்கள், வாகனத்தைப் பறிமுதல் செய்கிறார்கள். ஆனால் இது ஒன்றே இதற்கு ஒரு தீர்வாகிவிடாது. நான் இந்த அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த ரேஷன் அரிசி எங்கேயிருந்து,

எப்படி, யாரால் முதலிலே கடத்தப்படுகிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். ஏனென்றால் கடத்தியவன் மட்டும்தான் இவர்களுக்குக் கிடைக்கிறான், ஆனால், எந்த இடத்திலிருந்து கடத்தப்பட்டது என்கிற அந்த starting point என்று சொல்வார்கள்; எந்த இடத்தில் இது உண்மையிலேயே குறைவு ஏற்படுகிறது; அங்கிருந்து யார் அதைக் கொள்முதல் செய்கிறார்கள்; எங்கு அது லாரியிலே பயணிக்கத் தொடங்குகிறது; எங்கே அது கொண்டு போய்ச் சேர்க்கப்படுகிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். ஏற்கெனவே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் சி.ஐ.டி. பிரிவு என்று வைத்திருக்கிறீர்கள். அந்த சிவில் சப்ளைஸ் துறையைக் கவனித்துக்கொண்டிருக்கிற காவல் துறையினர் ஏதோ அப்போது கிடைக்கக்கூடியவனைப் பிடித்து லாரியையோ, மூட்டையையோ பிடித்து, வாகனத்தை பறிமுதல் செய்து, மூட்டையை பறிமுதல் செய்து அவர்கள் கொண்டு வந்து விட்டால் மட்டும் போதாது. இது உண்மையிலேயே எங்கு களவாடப்பட்டது; எந்த ரேஷன் கடையிலே குறைவு ஏற்பட்டது; அல்லது எங்கேயாவது Civil Supplies Corporation godown-ல் குறைவு ஏற்பட்டதா? அல்லது எங்கேயாவது இதை வாங்கியவர்கள், விற்றார்களா என்பதுபற்றி அவர்கள் எந்தவிதமான புலன் விசாரணையும் செய்வதே இல்லை.

இதனால், தமிழக அரசினுடைய உன்னதத் திட்டமான ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்பது அதிர்ஷ்டவசமாக வெளி மாநிலங்களில் இருப்பவர்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய ஒரு நல்ல திட்டமாக அமைந்திருக்கிறதேயொழிய, தமிழ்நாட்டு மக்களுக்கு முழுமையாகப் போய் சென்றடைய முடியாத ஒரு நிலை இருப்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ரேஷன் பொருட்கள் எந்தக் கடையிலிருந்து அல்லது எந்த இடத்திலிருந்து original-ஆக குறைவு ஏற்பட்டு கடத்தப்பட்டது; யார் கொள்முதல் செய்கிறார்கள் என்று கண்டறிய வேண்டும். குண்டர் சட்டத்தை எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை பேர்மீது போட்டிருக்கிறீர்கள்? உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி குண்டர் சட்டம் அவர்கள்மீது பாயும் என்று சொல்கிறார்கள். ஆனால், ஒருசில பேர்மீது மட்டும்தான் பாய்ந்திருக்கிறதேயொழிய, அது முழுமையாக அந்தக் கடத்தல்காரர்கள்மீது பாயவில்லை. ஆகவே, குண்டர் சட்டத்தைப் பாய்ச்சி, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தால் தமிழ்நாட்டு மக்கள் முழுமையாகப் பயனடையக்கூடிய வகையில், நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து, உண்மையான குற்றவாளிகளை

2009 பிப்ரவரி 24] [திரு. சி. ஞானசேகரன்]

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழோ அல்லது குண்டர் சட்டத்தின்கீழோ ஏதாவது ஒரு சட்டத்தின்கீழோ சிறையிலிட்டு, இந்த அரிசி ஏழை மக்களுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. தி. வேல்முருகன். சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் தொடர்ந்து பல்வேறு நாட்களில் செய்தித்தாள்களில் "ரேஷன் அரிசி கடத்தல்-அதிகாரிகள் பறிமுதல்," மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், அவர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்ய உத்தரவு" என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, தன்னுடைய அலுவலகத்திலே 24 மணி நேரமும் புகார்களைத் தெரிவிப்பதற்கான தொலைபேசி வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து, அதற்கான நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும்கூட, தொடர்ந்து ரேஷன் அரிசி கடத்தல் என்பது தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருக்கிறது. நம்முடைய தமிழக அரசு, கிலோ ஒரு ரூபாய்க்கு அரிசி தருவதை வெளி மாநிலங்களுக்குக் கடத்திச் சென்று, கிலோ 15 ரூபாய்க்கு, 20 ரூபாய்க்கு கொள்ளை இலாபம் ஈட்டுவதற்காக ஒரு கொள்ளைக் கும்பல், சில சிவில் சப்ளைஸில் உள்ள கருப்பு ஆடுகளை துணைக்கு வைத்துக்கொண்டு, இந்த மகாபாதகச் செயலைச் செய்து கொண்டிருக்கிறது. தமிழக அரசினுடைய திட்டம், அதனுடைய நோக்கம் அடித்தளத்திலே இருக்கிற மக்களுக்கு சென்றடையவில்லை என்பது ஒன்று: இரண்டாவது, எந்த அரிசியைக் கடத்தினாலும் அது ரேஷன் அரிசி கடத்தல் என்று செய்தி வருகிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் இந்த செய்திமூலம் சொல்ல விரும்புவது, வேலைக்கு உணவு திட்டம் என்ற அடிப்படையிலும், 40-க்கு 60 சதவிகிதம் என்று ஏரி, குளங்களைத் தூர்வாருகின்றபோது மத்திய அரசு கடந்தகால கட்டங்களில் tonnage கணக்கில், ஆயிரம் டன், இரண்டாயிரம் டன் என்று சொல்லி, தமிழ்நாட்டுக்கு அரிசி கொடுத்தபோது, அந்த அரிசியை வெளியிலே விற்க முடியாமல், அந்தப் பணியை எடுத்துச் செய்த ஒப்பந்ததாரர்களில் சிலர் தனியார் கிடங்குகளிலே ஆயிரக்கணக்கான மூட்டைகளை தேக்கி வைத்துக்கொண்டு, அதை இப்பொழுது

வெளியிலே லாரிகளிலே எடுத்துச் சென்று விற்பதற்கு முயற்சி செய்கிறார்கள். அவ்வாறு அதை விற்பனை செய்ய முயற்சி செய்கின்றபோது, அது பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும், ரேஷன் அரிசி கடத்தப்படுகின்றது என்று செய்தி வருகின்றது.

முற்பகல் 11-15

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும் உணவுத் துறைக்கு அளிக்கப்பட்ட அரிசியை கடத்துபவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை எடுத்து, இதுபோன்ற கடத்தலைத் தடுத்து நிறுத்தி, இதற்கு நிரந்தரமாக பாதுகாப்பு தரக்கூடிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்கு, தங்கள் துறைக்கு மத்திய அரசால் அளிக்கப்பட்ட அந்த அரிசியை இன்றைக்கு தமிழ்நாட்டில் எந்த வியாபாரியும் வாங்குவதற்குத் தயாராக இல்லை. அது காலதாமதமான அரிசி. கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியிலிருந்து இப்போது தி.மு.க. ஆட்சி வரை மத்திய அரசு திட்டிய அனைத்துத் திட்டங்களின்மூலம் தரப்படுகின்ற அரிசி, ஒவ்வொரு கிடங்கிலும் ஆயிரக்கணக்கில் மூட்டைகள் அப்படியே புழு பூத்துக்கொண்டு, அது சாப்பிடுவதற்கு இலாயக்கற்ற அரிசியாக இருக்கின்றது. அதை சில தனியார், கோழித் தீவனத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்துகொண்டிருக்கின்றார்கள். அதை நீங்கள் ஒரு வார காலம் அல்லது 10 நாட்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டு, வேலைக்கு உணவுத் திட்டத்தில் தரப்படுகின்ற அரிசி வெளியில் செல்வதற்கு அரசு அனுமதிக்கவேண்டும். அது வேறு எங்காவது சென்று கான்ட்ராக்டர்கள் அதைப் பணமாக மாற்றிக்கொள்வதற்கு அனுமதிக்கும் ஓர் அரசாணையை கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியில் வெளியிட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு வார காலம் அனுமதி கொடுத்தார்கள். அந்த அரிசி வெளியேறியது. உணவுக்குத் தேவையான அரிசி கடத்தல் செய்வது தடுக்கப்பட்டதாக செய்திகள் வந்தன. ஒன்று, நீங்கள் அந்த பாணியில் செய்து இதற்கு முடிவு காணுங்கள்.

இரண்டாவது, வேலைக்கு உணவு திட்டத்திற்கான அரிசியைக் கடத்துவதையும், அதற்கான பொருள்களைக் கடத்துவதையும் தொடர்ந்து செய்கின்ற அந்தக் கொள்ளைக் கும்பல்மீது கடுமையான சட்டத்தைப் பயன்படுத்தி, இனி வருங்காலங்களில் தமிழ்நாட்டில்

2009 பிப்ரவரி 24] [திரு. தி. வேல்முருகன்]

இதுபோன்ற அரிசிக் கடத்தல் நடைபெறாத அளவுக்கு தமிழக அரசு கடுமையான நடவடிக்கையை எடுக்கவேண்டும். தமிழக அரசு இதுவரைக்கும் எத்தனை பேரை குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்திருக்கிறது; அரிசி கடத்தலுக்கு உடந்தையாக இருந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகள், Food Cell C.I.D. அதிகாரிக்ள், காவல் துறை அதிகாரிகள், ஏனைய துறைப் பணியாளர்கள் என அரசு எத்தனை பேர்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது; எத்தனை பேர் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள்; எத்தனை பேர் dismiss செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அவைக்குத் தெரிவிக்கவேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்களும், தமிழ்நாட்டிலே அரிசிக் கடத்தல் நடைபெறுகிறது, அதன்மீது துறையின் சார்பாக, அரசின் சார்பாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அரசின் கவனத்தை ஈர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இச்சம்பவத்தில் வாணியம்பாடி அருகில் தகரக்குப்பம் என்ற இடத்தில் கடந்த 7-2-2009 அன்று குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறையின் சார்பாக தணிக்கை செய்துகொண்டிருந்தார்கள். அவ்வாறு திடீர் தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, ADT 3929 என்ற பதிவு எண் கொண்ட லாரி ஒன்று சிக்கியது. அதில் 4,778 கிலோ புழுங்கல் அரிசியும், 96 கிலோ பச்சரிசியும் ஆக, 4,874 கிலோ பொது விநியோகத் திட்ட அரிசி இருந்தது என்பது கண்டறியப்பட்டது. அதேநேரத்திலே KA 01C 1359 என்ற பதிவு எண் கொண்ட இரண்டாவது லாரியும் சிக்கியது. அதில் 4,403 கிலோ புழுங்கல் அரிசியும், 937 கிலோ பச்சரிசியும் ஆக மொத்தம் 5,340 கிலோ பொது விநியோகத் திட்ட அரிசி இருப்பதாக உறுதி செய்யப்பட்டு, அந்த இரண்டு லாரிகளையும் ஓட்டிச் சென்ற டிரைவர்களும் மற்றும் அதிலிருந்த நபர்களும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கைது செய்யப்பட்டது மட்டுமல்ல, இங்கே அவர் குறிப்பிட்டதைப்போல அந்த அரிசி எங்கிருந்து வந்தது என்பது கண்டறியப்பட்டு, அந்த அரிசியின் உரிமையாளர்

திரு. முனியப்பன் (எ) பிச்சாண்டி, அதேபோல லாரியினுடைய உரிமையாளர் திரு. சீனிவாசன், ஆந்திராவை சேர்ந்தவர்கள், இவர்கள் இருவர்மீதும் குற்ற எண் 52/9-ன்கீழ் Essential Commodities Act 1955-ன்கீழும், பிரிவு 403 இந்திய தண்டனைச் சட்டத்தின்படி 13-2-2009 அன்று அரிசி உரிமையாளர் கைது செய்யப்பட்டு அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

முற்பகல் 11-20

பொதுவாக ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்கின்ற இந்த மாபெரும் திட்டத்தை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த பிறகு, தமிழ்நாட்டிலே நுகர்வோரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு போடுவதைவிட, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு என்கிறபோது நுகர்வோருடைய அளவும் அதிகமாக இருக்கிறது. பொதுமக்கள் இதை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். பொதுமக்கள் அதிகமாகப் பயன்படுத்துகின்ற காரணத்தினால் கடைகளுக்கு off take, நுகர்வு என்பதை அதிகமாக அனுப்பவேண்டியிருக்கிறது. அதைத்தான் அனுப்புகிறோம். அப்படி அனுப்புகின்றபோது இதைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பும் இந்தத் துறையிலே இருக்கின்ற காரணத்தால்தான் இவர்கள் சொன்னதைப்போல border districts—பொதுவாக வேலூர் என்று எடுத்துக்கொண்டால், பக்கத்திலே ஆந்திரா, சித்தூர் இருக்கிறது. கர்நாடகா என்று எடுத்துக்கொண்டால், பக்கத்திலே இருக்கின்ற கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்கள் இருக்கின்றன. கேரளா என்று எடுத்துக்கொண்டால், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகியவை border districts, இந்த எல்லைப்புற மாவட்டங்களிலே, புதியதாக இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே patrol அதாவது பறக்கும்படையைக் காவல் துறை தனியாக வைத்து, ஏற்கெனவே இருக்கின்ற துறை அல்லாமல் காவல் துறை தனியாக அதற்கென்று ஒரு விழிப்புணர்வோடு இருக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ஆணை பிறப்பித்து, திருநெல்வேலி, கன்னியாகுமரி, வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலே சிறப்பு ரோந்துப் படைகளை அமர்த்தி, அதன்மூலமாகவும் இரவு முழுவதும் ரோந்து செய்யப்படுகிறது.

அதோடுமட்டுமல்ல, ஏற்கெனவே இந்த food cell units, 16 தான் இருந்தன. மூன்று மாவட்டங்கள், நான்கு மாவட்டங்களை இணைத்து ஒரு அலகாக இருந்தது. அதாவது யூனிட்டாக இருந்தது. ஏற்கெனவே

2009 பிப்ரவரி 24] [திரு. எ.வ. வேலு]

border districts எல்லாம் தனித்தனியாக ஆக்கவேண்டுமென்று முடிவு செய்து ,கூடுதலாக 16-க்கு மேல் இந்த ஆண்டு இன்னும் நான்கு, தஞ்சாவூர், திருவள்ளூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்களில் 4 அலகுகள், அதாவது 4 யூனிட்கள் அதிகமாகக் கொடுத்து இதைக் கண்டுபிடிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த பணிகளைச் சிறப்பாக செய்துகொண்டிருக்கிறோம்.

அதோடுமட்டுமல்ல, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு போட்டவுடனேயே பிற மாநிலத்திற்கு கடத்தப்படுகிறது என்கிற ஒரு செய்தியை இங்கே சொன்னார்கள். இந்த சித்தூர் மாவட்டம் என்று சொன்னால், சித்தூர் என்பது பிற மாநிலம். அந்த மாநிலமும், தமிழ்நாட்டில் இரண்டு border district-இல் இருக்கின்ற எஸ்.பி.க்களையெல்லாம் கூப்பிட்டு ஒருங்கிணைத்து கூட்டங்கள் நடத்தினோம். அதேபோன்று கர்நாடகத்திலுள்ள பெங்களூருவில் இருக்கின்ற, கோலார் பகுதியில் இருக்கின்ற எஸ்.பி.க்களை கூப்பிட்டு நம்முடைய எஸ்.பி.க்களையும் வைத்து இரண்டு கூட்டம் நடத்தினோம். அதேபோன்று கேரளாவிலே இருக்கின்ற பாலக்காடு பகுதியிலே இருக்கின்ற எஸ்.பி.ஐயும் வைத்துக்கொண்டு கூட்டம் நடத்தினோம். இப்படி பல்வேறு வகையிலே இந்தக் கூட்டங்களெல்லாம் மேற்கொண்டு, இந்தக் கூட்டங்கள் நடைபெற்றதன் விளைவாக, இன்றைக்கு வாகனங்களைக் கைப்பற்றுவதிலே பிற மாநிலங்களிலே இருக்கின்ற காவல் துறையும் நமக்கு உதவி செய்கிறார்கள். ஏற்கெனவே, பிற மாநிலத்திற்குள்ளே போனால் பிடிக்கவே முடியாது. கேரளாவிலே வண்டி போனது என்று சொன்னால் ஒரு காலத்திலே தமிழக போலீஸ் பிடிப்பதற்கு வாய்ப்பு இல்லாத நிலை இருந்தது. ஆனால், இன்றைக்கு அப்படிப்பட்ட வண்டிகள் பிடிக்கப்படுகின்றன.

அதன்மூலமாக, இந்த இரண்டு மாநில காவல் துறையினரும் ஒருங்கிணைந்து நடத்துகின்ற பல்வேறு ஆய்வுக் கூட்டத்தின் விளைவாக, லாரி உரிமையாளர்கள் சங்கத்துடன் அடிக்கடி கூட்டம் நடத்தி அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகிறோம். எல்லையோரத்திலே அரிசி கடத்துகின்ற குற்றவாளிகளைத் தேடி, பல்வேறு வகையிலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்ல இந்தக் காவல் துறையை பொறுத்த அளவிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். ஆய்வுக்கூட்டம் நடத்தவேண்டும். அதுபோன்று ஆய்வுக்கூட்டம் நடத்தியதே இல்லை, food cell-ஐ பொறுத்த அளவிற்கு தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்ததன் அடிப்படையிலே,

அறிவுரை சொன்னதன் அடிப்படையிலே 20-10-2006, 6-11-2007, 8-1-2008, 12-3-2008, 18-7-2008, 24-9-2008, 20-1-2009 ஆகிய நாட்களில் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அவர்களுக்கு விழிப்புணர்வு உருவாக்கி—இவர்கள் எங்கிருந்து புறப்படுகிறது என்று கேட்டார்கள். ஏதோ முன்னால் இருப்பவர்களை மட்டும் பிடித்துக்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படியல்ல, இந்த network, இந்தச் சங்கிலித் தொடரை எங்கெல்லாம் கட் செய்தால்தான் குறைக்கமுடியும் என்ற அடிப்படையிலே ஆய்வுக் கூட்டங்கள், இரகசியக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அதிலும் குறிப்பாக, 20-1-2009 அன்று, மேல் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நாங்கள் B.M. ACT-இன்கீழ் போடுகிறோம், ஆறு மாதத்தில் ஜாமீன் வாங்கி வெளியில் வந்துவிடுகிறார்கள். அதற்கும் மேலாக, என்ன நடவடிக்கை என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இத்தனைக் கூட்டங்கள் நடத்தியதன் விளைவாக இப்போது இந்த ஆட்சி பொறுப்பேற்ற 13-5-2006-லிருந்து 31-12-2006 வரை 58 பேரை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறோம். 2007-லே இது சம்பந்தமாக 59 பேர் மீது வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்திருக்கிறோம். 2008-ல் 135 பேரை சிறையில் அடைத்திருக்கிறோம். 2009-ல் இந்த 13 ஆம் தேதி வரைக்கும், ஜனவரி மாதத்திலிருந்து 15 பேர் கைது செய்து அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால், இப்படி அடைக்கப்பட்டாலும்கூட சில நேரங்களிலே அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு சென்று, உயர் நீதிமன்றத்திற்கு சென்று, ஜாமீன் வாங்கி வெளியில் வந்துவிடுகிறார்கள். வெளியில் வந்தால்கூட விடுவதாக இல்லை. இப்போது கடைசியாக போட்ட கூட்டத்தில் முடிவெடுத்தபின்பு, அவர்கள் குற்றவாளி அல்ல என்பதல்ல பொருள். அவர்கள் ஜாமீனில் வந்தால்கூட அவர்கள் குற்றவாளி என்பதைக் கண்டறிந்து, இப்போது E.C. Act-ல் கிட்டத்தட்ட 202 பேர்மீது கிரிமினல் குற்றங்கள் சாட்டப்பட்டு தொடர்ந்து charge sheet போடப்பட்டு வழக்குப் பதிவு செய்து கோர்ட்டில் வழக்கை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 11-25

அதற்கு முன்னால் எல்லாம், B.M. Act-லே போனவர்கள் வெளியே வந்து விடுவார்கள். ஒன்றுமில்லாத நிலைமை எல்லாம் ஏற்கெனவே இருந்தது. இப்பொழுதெல்லாம் அப்படி அல்ல. அவர்கள் வெளியிலே ஜாமீனிலே வந்தாலும்கூட அவர்கள்மீது குற்றம் இல்லை என்று

பொருள் அல்ல. எனவே, குற்றம் நிரூபிப்பதற்கு வேண்டிய அதனுடைய record-களையெல்லாம் திரட்டி, பழையக் குற்றவாளிகள் கிட்டத்தட்ட 202 பேர்மீது Charge sheet-கள் போடப்பட்டு இப்பொழுது நீதிமன்றத்திலே இருக்கின்றன.

அதோடு மட்டுமல்ல, முன்பெல்லாம் லாரியை seize செய்தால் 25,000 ரூபாய் பணம் கட்டினால், இல்லை Section 6A case-லே D.R.O.-விடம் case நடத்தினார்கள் என்றால் fine போட்டால் வெளியே வந்துவிடலாம் என்ற நிலைமை இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிதாக ஒரு ஆணை பிறப்பித்தார்கள். இந்த லாரிமூலம் அரிசிக் கடத்தலில் யார் ஈடுபட்டாலும் அந்த லாரியினுடைய permit-ஐ cancel பண்ணுங்கள் என்று புதிதாக ஒரு ஆணைப் பிறப்பித்தார்கள். அந்த அடிப்படையிலே இப்போது 292 வாகனங்களுக்கு permit-ஐ இரத்து செய்வதற்காக போக்குவரத்துத் துறைக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். அதிலே 15 பேர்களுடைய லாரி permit-கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. 179 driving licences cancel பண்ணுவதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டன. அதிலே 3 பேருடைய driving licences இன்றைக்கு இரத்து செய்யப்பட்டுவிட்டன. ஏனையவர்களுடையதும் இரத்து செய்ய வேண்டி பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, இங்கே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, பல்வேறு வகையிலே தமிழ்நாட்டிலே பல மாவட்டங்களிலே, விற்பனையாளர்கள்மூலமாக சில நேரங்களிலே அரிசிக் கடத்தல் நடைபெறுகிறது என்று சில இடங்களிலேயிருந்து புகார்கள் எங்களுக்கு வந்தது. அதனுடைய அடிப்படையிலே தனியாக அதற்கென்று குழு அமைத்து, எந்தெந்தப் பகுதியிலே இந்த விற்பனையாளர்கள் மூலமாக இந்த network-லே அவர்களும் இணைந்து—நான் சொன்னேனே, அரிசி கடத்துபவர்கள், அரிசி எங்கேயிருந்து புறப்படுகிறது, எங்கு போய்ச் சேருகிறது என்ற ஒரு கூற்றை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எடுத்து வைத்தாரே, அதைக் கண்டறிய வேண்டும் என்கிற அடிப்படையிலே மூலத்தைக் கண்டறிய வேண்டுமென்கிற அந்த அடிப்படையிலே—இப்பொழுது விற்பனையாளர்கள் என்கிற முறையிலே அதைக் கண்டுபிடித்து சென்னையிலே 21 விற்பனையாளர்கள், திருவண்ணாமலையிலே 9 விற்பனையாளர்கள், கடலூரிலே 4 விற்பனையாளர்கள், கோயம்புத்தூரிலே 5 விற்பனையாளர்கள், சேலத்திலே 5 விற்பனையாளர்கள், கிருஷ்ணகிரியிலே 1 விற்பனையாளர்,

ஈரோட்டிலே 1, திருச்சிராப்பள்ளியிலே 6, நாகப்பட்டினத்திலே 1, திண்டுக்கல்லிலே 2, உத்தமப்பாளையத்திலே 5, திருநெல்வேலியிலே 3, தூத்துக்குடியிலே 2, குளித்தலையிலே 1, மதுரையிலே 27 ஆக இந்த ஆண்டு 93 விற்பனையாளர்கள் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று அறிந்து, அவர்கள்மீதும் நாங்கள் வழக்குத் தொடர்ந்து அவர்களை சிறையிலே அடைத்திருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்தளவிற்கு ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு என்ற திட்டத்தினால் தமிழ்நாட்டிலே ஒரு கோடியே 87 இலட்சம் குடும்பங்கள் நேரடியாகப் பயன்பெறுகின்றன. அதனால் அந்தக் குடும்பங்கள் எல்லாம் என்றைக்கும் நிறைவாக உண்ண வேண்டும் என்ற நல்ல திட்டமாக இருக்கிற காரணத்தினால்தான், இந்தத் துறையின்மூலமாக வேறெந்த அடிப்படையும், எந்த நோக்கமும் இல்லாமல் கடுமையாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல, ஏதோ விற்பனையாளர்கள் மட்டுமல்ல, hulling licence உள்ளவர்கள், கூடுமான வரைக்கும் நமது தமிழ்நாட்டைப் பொறுத்தளவுக்கு, நெல்லை வாங்கி அதை அரைத்து இந்தப் பொது விநியோகத் திட்டத்திற்கு முகவர்கள் கொடுக்கிறார்கள். அவர்கள் தவறு செய்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து, கிட்டத்தட்ட இந்த ஆண்டு 12 hulling licence உள்ளவர்கள்மீதும் வழக்குத் தொடர்ந்து அவற்றை இரத்து செய்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆக, தமிழக அரசைப் பொறுத்தளவுக்கு மாண்புமிகு முதலமைச்சருடைய கட்டுப்பாட்டிலே இருக்கிற காவல் துறையைச் சேர்ந்த நண்பர்கள் இதிலே மிகவும் கவனமாக இருந்து, பல்வேறு வகையிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல, இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு திரும்பத் திரும்ப என்னுடைய மானியக் கோரிக்கை பதிலுரையிலே நான் சொல்லி இருக்கிறேன்; இந்தத் துறைக்குப் பெயரே பொதுத் துறை. இந்தத் துறை என்பது P.D.S., Public Distribution System, இதிலே மாற்றுக் கட்சி, எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்றெல்லாம் அல்ல. அனைவரும்தான் பயன்படுத்துகிறோம். ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியாக இருந்தாலும் சரி, பாமாயிலாக இருந்தாலும் சரி, துவரம் பருப்பாக இருந்தாலும் சரி, மசாலா பாக்கெட்டாக இருந்தாலும் சரி, அனைவரும் பயன்படுத்துகிறோம். அதனால்தான் இந்தத் துறையைப் பொறுத்தளவுக்கு சம்பந்தப்பட்ட நம்முடைய அமைச்சர் அலுவலகத்திலும் சரி, அது சம்பந்தப்பட்ட ஆணையாளர், செயலாளர் ஆகியோருடைய தொலைபேசி எண்களை

2009 பிப்ரவரி 24] [திரு. எ.வ. வேலு]

நாங்கள் பத்திரிகையிலே கொடுத்திருக்கிறோம். யார் வேண்டுமானாலும் புகார் செய்யலாம். உடனே தயவு தாட்சண்யம் இல்லாமல் தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பலமுறை நாங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். எனவே, இந்த அரிசிக் கடத்தல் சம்பந்தப்பட்டதில்கூட எங்கேயாவது தவறு இருக்கிறது என்று சொன்னால், அந்தத் தகவலை சட்டப் பேரவை உறுப்பினர்கள் உடனே எங்களுடைய அலுவலகத்திற்கு அனுப்புங்கள் அதன்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசைப் பொறுத்தளவுக்கு கடத்தலைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். மேலும் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி செய்வோம். இதை அறவே ஒழிப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளும். அவ்வப்பொழுது முதலமைச்சருடைய ஆலோசனையைப் பெறுகிறோம். அந்த அடிப்படையிலே அரிசிக் கடத்தல் என்பது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்கிற தகவலையும் இரண்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நேரம் அவர் பதில் சொல்லி இருக்கிறார். திரும்பவும் என்ன கிளாரிஃபிகேஷன், நேரம் என்ன ஆயிற்று? இன்னும் பொது விவாதத்தில் நிறைய பேர் பேச வேண்டும். உட்காருங்கள்.

(இ) திருத்துறைப்பூண்டி, பிறவி மருந்தீஸ்வரர் திருக்கோயில் மரகதலிங்கம் காணாமல் போனது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருள்மிகு ஔஷதீஸ்வரர் திருக்கோயிலின் விலை மதிப்பற்ற மரகதலிங்கம் 19-2-2009 அன்று இரவு காணாமல் போனதால் ஏற்பட்ட நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. உலகநாதன், திரு. சு. குணசேகரன், திரு. எஸ். இராசசேகரன், திரு. தி. இராமசாமி ஆகியோரும் விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். தகவல் கோரல் என்ற முறையில் இதை எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக கட்சிக்கொருவர் என்ற முறையில் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திரு. கி. ஆறுமுகம். சுருக்கமாகச் சொல்லுங்கள்.